# Tnpsc Model Question Paper 10 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. கல்கத்தாவில் உள்ள இந்துக் கல்லூரியை நிறுவியவர்
(அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் (ஆ) மார்ஷ்மென் (இ) மெக்காலே **(ஈ) டேவிட் ஹேர்**

2. இந்தியா இறையாண்மை கொண்ட நாடாக உருவானது
(அ) 4 செப்டம்பர் 1947 (ஆ) 27 ஜீன் 1947 **(இ) 15 ஆகஸ்ட் 1947** (ஈ) 15 மார்ச் 1947

3. சி. ராஜகோபாலாச்சாரி 1930 ஏப்ரல் 13 அன்று உப்பு சட்டத்தை மீறுவதற்காக 98 சத்தியாகிரகிகளின் 150 மைல் அணி வகுப்பை ------------- முதல் வேதாரண்யம் வரை நடத்தினார்
(அ) மதுரை **(ஆ) திருச்சி** (இ) தஞ்சை (ஈ) மெட்ராஸ்

4. அண்ணாதுரை செயல்படுத்த ஆர்வமாக இருந்த முதல் யோசனை, ஒரு ரூபாய்க்கு மூன்று கிலோ --------- வழங்குவது
**(அ) அரிசி** (ஆ) சர்க்கரை (இ) கோதுமை (ஈ) பருப்பு

5. --------- ஆண்டு அம்பேத்கர் தீண்டத்தகாதவர்களின் தார்மீக மற்றும் பொருள் முன்னேற்றத்திற்காக பம்பாயில் "பஹிஷ்கிருத் ஹித்கரனி சபா" என்ற அமைப்பைத் தொடங்கினார்
(அ) 1891 **(ஆ) 1924** (இ) 1955 (ஈ) 1923

6. ஆர்யா மகிளா சபாவை ஸ்தாபிப்பதில் அதிக உதவி செய்த திறமையான மராட்டிய பெண்.
**(அ) பண்டிட் ரமாபாய்** (ஆ) முத்துலெட்சுமி ரெட்டி (இ) அம்புஜாம்மாள் (ஈ) லட்சுமி

7. பின்வரும் நிகழ்வுகளை காலவரிசைப்படி/நிகழ்வு வகையின்படி ஒழுங்கமைக்கவும்.
(அ) தானாபூரில் கிளர்ச்சி
(ஆ) மீரட்டில் கிளர்ச்சி
(இ) ஜான்சியின் ராணி லட்சுமிபாய் மரணம்
(ஈ) மங்கள் பாண்டே தூக்கிலிடப்பட்டார்
(அ) 2, 3, 1, 4 (ஆ) 1, 2, 4, 3 **(இ) 4, 2, 1, 3** (ஈ) 3, 1, 4, 2

8. இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்ற போது தமிழகத்தின் முதல்வராக இருந்தவர் பெயரை குறிப்பிடுக:
**(அ) அண்ணாதுரை** (ஆ) காமராஜர் (இ) கருணாநிதி (ஈ) ஜெயலலிதா

9. "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்"
என்ற பாடல் வரிகள் இடம்பெற்ற தீர்ப்பு எது?
(அ) அலிப்பூர் வெடிகுண்டு வழக்கு **(ஆ) ஆஷ் கொலை வழக்கு**
(இ) அஸ்வினி குமார் வழக்கு (ஈ) குத்திராம் போஸ் வழக்கு

10. கீழ்கண்டவற்றில் அயோத்திதாசர் பண்டிதர் பற்றி சரியான கூற்று எது?
1. இவர் 1870ல் அத்வைத்னந்தா என்ற சபையை நீலகிரியில் ஆரம்பித்தார்.
2. 1881ல் திராவிட மகாஜன சங்கத்தை ஆரம்பித்தார்.
3. 1897ல் ஒரு பைசா தமிழன் என்ற பத்திரிக்கையை ஆரம்பித்தார்.
4. 1898ல் சாக்கிய புத்தக சங்கம் என்ற அமைப்பை ஆரம்பித்தார்
(அ) 1, 2 மட்டும் சரி (ஆ) 2, 3 மட்டும் சரி (இ) 3, 4 மட்டும் சரி **(ஈ) 1, 2, 3, 4 சரியானது**

11. எந்த ஆளுநர் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் "கண்ட பேரரசர்" என்று அழைக்கப்பட்டார்?
(அ) கர்சன் (ஆ) டியூப்ளே **(இ) ராபர்ட் கிளைவ்** (ஈ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

12. இயற்கைப் பொருள்கள் இயங்கிக் கொண்டிருப்பது போலவே மனித வரலாறு இயங்கிக் கொண்டிருக்கிறது எனக் கூறும் வாதம்.
**(அ) வரலாற்றுப் பொருள் முதல் வாதம்** (ஆ) பொதுவுடைமை
(இ) மிதவாதம் (ஈ) பொருளாதாரப் பொருள் முதல் வாதம்

13. "தாளாண்மை இல்லாதவன்" என்று திருவள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?
(அ) ஊக்கம் இல்லாதவன் (ஆ) தர்மம் செய்யாதவன்
**(இ) விடாமுயற்சி இல்லாதவன்** (ஈ) கோபம் கொள்ளதவன்

14. பசுவய்யா என்ற பெயர் கொண்ட நான்கு இலக்கியப் படைப்பாளிகளில் யார்?
**(அ) சுந்தர ராமசாமி** (ஆ) தர்மர் (இ) ஜெயகாந்தன் (ஈ) பொன்னீலன்

15. தமிழ் நாடகத்தின் தலையாசிரியர் எனப் போற்றப்படுபவர் யார்?
**(அ) சங்கரதாஸ் சுவாமிகள்** (ஆ) பம்மல் சம்பந்தர்
(இ) டி.கே.சிதம்பரனார் (ஈ) வ.வே.சுப்பிரமணியம்

16. 'Houangtche" குறிக்கும் இடம்
**(அ) காஞ்சி** (ஆ) மைசூர் (இ) பாண்டியர்கள் (ஈ) புகார்

17. காசிக் காண்டம் என்னும் நூலை இயற்றியவர்?
(அ) இரட்டையர்கள் (ஆ) செயங்கொண்டார்
(இ) குமரகுருபரர் **(ஈ) அதிவீரராம பாண்டியர்**

18. பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும் பரிந்து அவ்வேட்டைத்
தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய் மணக்கும்
– எது?
(அ) திருவாசகம் **(ஆ) படிக்காசுப் புலவரின் பாடல் ஏடு**
(இ) திருப்புகழ் (ஈ) தமிழ்ச்சுவடி

19. "சங்கப் பாடல்களைத் தரத்தில் மிஞ்சியவை உலக இலக்கியத்தில் இல்லை என்று கூறிய கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்க கழகப் பேராசிரியர்
(அ) ஹார்ட் **(ஆ) ஆர்.ஈ.ஆஷர்** (இ) தீக்கன் (ஈ) இராபர்ட் கால்டுவெல்

20. "ஓங்குதிரை வியன் பரப்பின்
ஒலிமுந்நீர் வரம்பாக......"
– என்ற அடியில் காணப்படும் "முந்நீர்" என்பதன் பொருள்
**(அ) ஆற்றுநீர், ஊற்று நீர், மழைநீர்** (ஆ) ஓடை நீர், குடி நீர், மழைநீர்
(இ) குளிர்ந்த நீர், ஊற்றுநீர், ஆற்றுநீர்; (ஈ) தண்ணீர், வெந்நீர், மழைநீர்

21. 1.இந்த இடம் தாமிரபரணி ஆற்றிங் கரையில் அமைந்துள்ளது.
2. தூழிகள் புதைக்கப்பட்ட களம் 114 ஏக்கர் பரப்பளவில் பரவி காணப்படுகிறது.
மேற்கூறிய கூற்றுக்கள் எந்த தொல்பொருள் தளத்தைப் பற்றி விவரிக்கிறது?
**(அ) ஆதிச்சநல்லூர்** (ஆ) அரிக்கமேடு (இ) கீழவளவு (ஈ) கழுகுமலை

22. "களவழி நாற்பது" எந்த அரசரை புகழ்ந்துரைக்கிறது?
(அ) அதிகமான் (ஆ) முதலாம் குலோத்துங்கன் (இ) நெடுங்கிள்ளி **(ஈ) செங்கணான்**

23. தமிழ்நாடு மாநிலமானது எத்தனை வேளாண்–கால நிலைகளை கொண்ட துணை மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது?
(அ) 11 **(ஆ) 7** (இ) 9 (ஈ) 3

24. எந்த நகரம் ஆசியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படுகிறது?
**(அ) சென்னை** (ஆ) மதுரை (இ) பெங்களூரு (ஈ) மைசூர்

25. தமிழ்நாட்டில் உழவன் செயலி அறிமுகப்படுத்திய ஆண்டு
**(அ) 2018** (ஆ) 2019 (இ) 2020 (ஈ) 2021

26. திறன் மேம்பாட்டு கல்வி திட்டம் – இதை எந்த நிறுவனம் கையாள்கிறது?
(அ) என்.சி.இ.ஆர்.டி (ஆ) யூ.ஜி.சி (இ) என்.ஏ.ஏ.சி **(ஈ) என்.யூ.இ.பி.எ**

27. கிராமப்புற மற்றும் நகர்புற உள்ளாட்சித் தேர்தல் யாரால் நடத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது?
(அ) இந்திய தேர்தல் ஆணையம் **(ஆ) மாநில தேர்தல் ஆணையம்**
(இ) மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நீதிபதி (ஈ) திரும்பும் அதிகாரி

28. 2011 கணக்கெடுப்பு கூற்றின்படி, தமிழ்நாட்டின் மக்கள் தொகை நெருக்கம் ---------- இருந்தது
(அ) 333 நபர் ஒரு சதுர கிலோமீட்டர் (ஆ) 444 நபர் ஒரு சதுர கிலோமீட்டர்
**(இ) 555 நபர் ஒரு சதுர கிலோமீட்டர்** (ஈ) 666 நபர் ஒரு சதுர கிலோமீட்டர்

29. 2011ல் தமிழ்நாட்டில் மொத்த எழுத்தறிவு விகிதாச்சாரம் ----------- இருந்தது
(அ) 60.33% (ஆ) 70.33% **(இ) 80.33%** (ஈ) 90.33%

30. தமிழ்நாட்டில், முதலமைச்சர் சூரிய சக்தி பசுமை வீடு திட்டம் ----------- ஆண்டு தொடங்கப்பட்டது
(அ) 2010 **(ஆ) 2011** (இ) 2012 (ஈ) 2013

31. தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT) நிறுவப்பட்ட ஆண்டு
(அ) 1968 (ஆ) 1970 **(இ) 1971** (ஈ) 1980

32. தமிழ்நாட்டின் பொருளாதாரம் இந்தியாவின் ---------- மிகப் பெரிய மற்றும் ----------- அதிக மக்கள் கொண்ட மாநிலமாகும்.
(அ) 12வது மற்றும் 7வது (ஆ) 13வது மற்றும் 15வது
**(இ) 11வது மற்றும் 6வது** (ஈ) 10வது மற்றும் 4வது

33. மாலாவிடம் 10 செ.மீ., 11 செ.மீ., 12 செ.மீ……, 24 செ.மீ என்ற பக்க அளவுள்ள 15 சதுர வடிவ வண்ணக் காகிதங்கள் உள்ளன. இந்த வண்ணக் காகிதங்களைக் கொண்டு எவ்வளவு பரப்பை அடைத்து அலங்கரிக்க முடியும்?
**(அ) 4615 செ.மீ$^2$** (ஆ) 4625 செ.மீ$^2$ (இ) 4635 செ.மீ$^2$ (ஈ) 4600 செ.மீ$^2$

34. இரண்டு தொடர் தள்படிகளான 20% மற்றும் 25% ஆகியவற்றிற்கு நிகரான ஒரே தள்ளுபடி சதவீதம்
**(இ) 40%** (ஆ) 45% (இ) 5% (ஈ) 22.5%

35. ஒரு நாளில் 10 மணி நேரம் என்பது எத்தனை சதவீதம்?
(அ) 16 1/3% **(ஆ) 41 2/3%** (இ) 12 2/5 % (ஈ) 10 2/5%

36. ஒரு கலையரங்கத்தில் முதல் வரிசையில் 20 இருக்கைகளும் மொத்தம் 30 வரிசைகளும் உள்ளன. அடுத்தடுத்த ஒவ்வொரு வரிசையிலும் அதற்கு முந்தைய வரிசையை விட இரண்டு இருக்கைகள் கூடுதலாக உள்ளன எனில் கடைசி வரிசையில் எத்தனை இருக்கைகள் உள்ளன?
(அ) 600 (ஆ) 600 **(இ) 78** (ஈ) 18

37. 9, 3, 1, … என்ற பெருக்குத் தொடர் வரிசையின் 8வது உறுப்பைக் காண்க.
(அ) 1/27 (ஆ) 1/81 **(இ) 1/243** (ஈ) 1/729

38. A என்பது +, B என்பது –, C என்பது x மற்றும் D என்பது ÷ எனில், ன்2C15B7A100D10 மதிப்பு என்ன?

(அ) 24 (ஆ) 26 **(இ) 33** (ஈ) 36

39. EXAMINATION என்ற வார்த்தை FYBNJOBUJPO என்ற குறியீட்டால் குறிக்கப்பட்டால் CERTIFICATE என்ற வார்த்தை எவ்வாறு குறிப்பிடப்படும்?
(அ) DFSUJHJDBUF **(ஆ) DFSUJGJDBUF** (இ) DFSJUGJDBUF (ஈ) DFSUJGIDBUF

40. ஒரு சீரான பகடையை உருட்டும்போது ஓர் இரட்டை எண் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?
**(அ) 1/2** (ஆ) 1/3 (இ) 5/6 (ஈ) 2/3

41. நாளைய மழை பொழிவிற்கான, நிகழ்தகவு 0.91 எனில் மழை பொழியாமல் இருப்பதற்கான நிகழ்தகவு என்ன?
**(அ) 0.09** (ஆ) 1.09 (இ) 0.09 (ஈ) 1.90

42. A என்பவர் ஒரு வேலையை 30 நாட்களில் செய்து முடிப்பார். B என்பவர் அதே வேலையை 40 நாட்களில் செய்து முடிப்பார் எனில் Aயும் Bயும் சேர்ந்து அந்த வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?
(அ) 18 **(ஆ) 17 1/7** (இ) 20 (ஈ) 16 1/6

43. A ஆனவர் Bஐக் காட்டிலும் 3 மடங்கு வேகமாக ஒரு வேலையை செய்து முடிப்பார். அவரால் அந்தப் பணியை B எடுத்துக் கொண்ட நேரத்தை விட 24 நாட்கள் குறைவாக எடுத்து முடிக்க முடிகிறது. இருவரும் சேர்ந்து அந்த வேலையை முடிக்க ஆகும் நேரத்தைக் காண்க
(அ) 8 நாட்கள் **(ஆ) 9 நாட்கள்** (இ) 16 நாட்கள் (ஈ) 7 நாட்கள்

44. ஒரு கூம்பின் அடிப்புற ஆரம் மும்மடங்காகவும் உயரம் இரு மடங்காகவும் மாறினால் கனஅளவு எத்தனை மடங்காக மாறும்?
(அ) 6 மடங்கு **(ஆ) 18 மடங்கு** (இ) 12 மடங்கு (ஈ) மாற்றமில்லை

45. ஒரு விட்டமும், உயரமும், உடைய உருளை, கூம்பு, கோளம் ஆகியவற்றின் கன அளவுகளின் விகிதம்
(அ) 1 : 2 : 3 (ஆ) 2 : 1 : 3 (இ) 1 : 3 : 2 **(ஈ) 3 : 1 : 2**

46. P = ரூ.5, 000 ஆண்டு வட்டி வீதம் R = 4%, N = 2 ஆண்டுகள் எனில், தனிவட்டிக்கும், கூட்டு வட்டிக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்க:
**(அ) ரூ.8** (ஆ) ரூ.16 (இ) ரூ.24 (ஈ) ரூ.32

47. ஓர் இயந்திரத்தின் விலை ரூ.18, 000. அது ஆண்டுக்கு 16 2/3% வீதம் தேய்மானம் அடைகிறது. 2 ஆண்டுகளுக்குப் பிறகு அதன் மதிப்பு ------------ ஆக இருக்கும்.
(அ) ரூ.12, 000 **(ஆ) ரூ.12, 500** (இ) ரூ.15, 000 (ஈ) ரூ.16, 500

48. ஒரு தொகையானது 3 ஆண்டுகளில் 12% தனிவட்டி வீதத்தில் தொகை ரூ.17, 000 ஆகக் கிடைக்கிறது எனில் இந்தத் தொகையைக் காண்க
(அ) ரூ.612 **(ஆ) ரூ.12, 500** (இ) ரூ.4500 (ஈ) ரூ.10, 620

49. ஒரு தண்ணீர்த் தொட்டியின் கொள்ளவு 50 லி ஆகும். தற்போது 30% தண்ணீர் நிரம்பியுள்ளது. எனில் அதில் 50% தண்ணீர் நிறைய இனனும் எத்தனை லிட்டர்கள் தேவை?
(அ) 15 லி (ஆ) 40 லி **(இ) 10 லி** (ஈ) 25 லி

50. x : y = 2 : 3, எனில் 3x + 2y : 2x + 5y.ன் மதிப்பு காண்க:
(அ) 5 : 2 **(ஆ) 12 : 19** (இ) 10 : 13 (ஈ) 3 : 2

51. y ஆனது x +3 க்கு நேர்விகிதத்தில் அமைகிறது. மேலும் x = 1, y = 8, x = 3 எனில், எனில், y ன் மதிப்பு என்ன?
(அ) 3 (ஆ) 5 (இ) 10 **(ஈ) 12**

52. $(x^4-1)$ and $(x^2-2x+1)$ ஆகிய பல்லுறுப்புக் கோவைகளின் மீ.சி.ம.காண்க:

(அ) $(x+1)^2$ $(x^2+1)$ $(x-1)$ (ஆ) $(x^2-1)$ $(x-1)^2$ $(x-1)$ **(இ) $(x^2+1)(x-1)^2$ $(x+1)$** (ஈ) $(x^2+1)$ $(x^2-1)$ $(x-1)^2$

53. இரு எண்களின் பெருக்கல் பலன் 2160 மற்றும் அவற்றின் மீ.பொ.வ. 12 எனில் அவற்றின் மீ.பொ.ம. காண்க:
(அ) 210 **(ஆ) 180** (இ) 150 (ஈ) 120

54. $(-16) \div 4$ க்கு சமமானது எது?
(அ) $-(-16) \div 4$ (ஆ) $(-16) \div (-4)$ **(இ) $16 \div (-4)$** (ஈ) $(-4) \div (-16)$

55. மீ.பொ.வ.காண்க:
$x^4-1$, $x^4+5x^3-5x^2+5x-6$
**(அ) $(x^4+1)$ $(x-1)$** (ஆ) $(x^2+1)$ $(x-6)$ (இ) $(x^4+1)$ $(x+6)$ (ஈ) $x^4-1$

56. ஓர் எண்ணில் 60% இலிருந்து 60ஐக் கழித்தால் 60 கிடைக்கும் எனில் அந்த எண்
(அ) 60 (ஆ) 100 (இ) 150 **(ஈ) 200**

57.ஒரு நபரின் வருமானம் 10% அதிகரிக்கப்பட்டு பிறகு 10% குறைக்கப்படுகிறது எனில், அவரது வருமானம்
(அ) 2% குறைகிறது **(ஆ) 1% குறைகிறது** (இ) 1% அதிகரிக்கிறது (ஈ) 2% அதிகரிக்கிறது

58. அணுவின் மின்னூட்டமானது ------------- ஆகும்
(அ) நேர்மின்னூட்டம் **(ஆ) மின்னூட்டமற்றது**
(இ) எதிர் மின்னூட்டம் கொண்டது (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

59. மாறுதிசை மின்னோட்டத்தை நேர்திசை மின்னோட்டமாக மாற்றுவது ------------- ஆகும்
(அ) டைனமோ **(ஆ) மின்திருத்தி** (இ) மின்மாற்றி (ஈ) மோட்டார்

60. சூறைக் காற்றில் கூரை தூக்கி எறியப்படுதல் கீழ்கண்ட எவற்றின் பயன்பாடு?
(அ) பாஸ்கல் விதி (ஆ) டாரிசெல்லா விதி **(இ) பெர்னௌலியின் தேற்றம்** (ஈ) ஹீக் விதி

61. ஒரு கிரிக்கெட் வீரர் தன் மட்டையால் பந்தை அடிக்கும் போது, மட்டை பந்தின் மீது செலுத்துவது ----- ஆகும்
(அ) புவிஈர்ப்பு விசை (ஆ) உராய்வு விசை
**(இ) கணத்தாக்கு விசை** (ஈ) மையவிலகல் விசை

62. ஒரு ஆசிரியர் சில இனிமையான தூண்டுதலின் உதவியுடன் ஒரு சிக்கலான யோசனையை கற்பிக்க முயற்சிக்கிறார். மற்றும் பல்வேறு சூழ்நிலைகளை மீண்டும் மீண்டும் பயன்படுத்திய பிறகு மாணவர்கள் கற்றல் முறையை விரும்புகிறார்கள். இந்த முறைக்கு அடிப்படையான கோட்பாடு
(அ) முயன்று தவறிக் கற்றல் முறை **(ஆ) பகுத்தறிந்து கற்றல் முறை**
(இ) புலனுணர்வு கற்றல் முறை (ஈ) புலனுணர்வு கற்றல் முறை

63. தமிழ்நாட்டில் அமைந்து இருக்கும் அணு ஆற்றல் ஆராய்ச்சி மையத்தின் பெயர் ------------- ஆகும்?
(அ) இஸ்ரோ **(ஆ) ஐஜிகர்** (இ) கேட் (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

64. பின்வருவனவற்றுள் எது அறிவியல் பகுத்தறிவு அல்ல?
(அ) மெய்சிந்தனை (ஆ) மறைமுக செயல் **(இ) வெளிப்படை செயல்** (ஈ) சிக்கல் தீர்த்தல்

65. எண்ணெய், இயற்கை வாயு, நிலக்கரி முதலியன ------------- உதாரணமாகும்
(அ) புவி வெப்ப சக்தி (ஆ) உயிர் எரிபொருள்
**(இ) படிம எரிபொருள்** (ஈ) புதுப்பிக்கவல்ல சக்தி

66. ராஜிவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் அமைந்துள்ள இடம்
(அ) புது டெல்லி **(ஆ) தமிழ்நாடு** (இ) கேரளா (ஈ) மத்திய பிரதேசம்

67. ஐ.நா.சபையின் ஆசியா சுற்றுச்சூழல் பாதுகாப்பு விருது பெற்ற முதல் இந்தியர்
**(அ) சஷ்மித்தா லேந்கா** (ஆ) சதாமூர்த்தி
(இ) பிரிந்தா காரட் (ஈ) உமா பாரதி

68. வளர்ச்சி திட்டங்களுக்காக கூட்டாட்சியினை மறுவரையறை செய்வதில் மாநிலங்களுக்கிடையே நிதி ஆயோக் மேற்கொள்ளும் வழிமுறையானது
**(அ) போட்டி மற்றும் கூட்டுறவு கூட்டாட்சி முறை** (ஆ) கூட்டுறவு கூட்டாட்சி முறை
(இ) ஒற்றை மற்றும் குறை கூட்டாட்சி முறை (ஈ) ஒத்து–தேர்வு கூட்டாட்சி முறை

69. அல்தாப் பாத்திமாவின் இண்டாவது புதினம் "தஸ்தக் நவ தோ" (1964) (The one who did not ask) எந்த மொழியில் எந்த வருடம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது
**(அ) ஆங்கிலம், 1994** (ஆ) மலையாளம், 1994 (இ) ஹிந்தி, 1994 (ஈ) உருது, 1994

70. 2020ல் யுனெஸ்கோ அமைப்பால் உலக பாரம்பரிய சின்னங்கள் என்று அறிவிக்கப்பட்ட எத்தனை இடங்கள் இந்தியாவில் உள்ளன?
**(அ) 38** (ஆ) 33 (இ) 30 (ஈ) 35

71. 2019ஆம் ஆண்டு 50வது தாதசாகிப்பால்கே விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர்
(அ) நடிகர் ரஜினிகாந்த **(ஆ) நடிகர் அமிதாப்பச்சன்**
(இ) நடிகர் அமீர்கான் (ஈ) நடிகர் அபிஷேக் பச்சன்

72. "வந்தே மாதரம்" என்ற பாடலை சமஸ்கிருதத்தில் இயற்றியவர்
(அ) ரபிந்திரநாத் தாகூர் (ஆ) சரோஜினி நாயுடு
**(இ) பகிம்சந்திர சட்டர்ஜி** (ஈ) பண்டிட் ரவி சங்கர்

73. 1961 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் பேசப்படும் மொத்த மொழிகள் எத்தனை?
(அ) 167 (ஆ) 177 **(இ) 187** (ஈ) 197

74. இந்தியாவில் எந்த ஆண்டு விரைவு அஞ்சல் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது?
**(அ) 1975** (ஆ) 1977 (இ) 1971 (ஈ) 1976

75. கூற்று (A): கரிசல் மண் அவற்றின் மூலப்பொருட்களை வானிலைச் சிதைவுற்ற பாறைகளிலிருந்து பெறுகிறது.
காரணம் (R): கரிசல் மண்ணிற்கு அதிக நீரை தக்க வைக்கும் திறன் உள்ளது.
(அ) (A) மற்றும் (R) சரியானவை மற்றும் (R) என்பது (A) இன் உண்மையான விளக்கம்
**(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை ஆனால் (R), (A) யை விளக்கவில்லை**
(இ) (A) மட்டுமே சரியானது (R) தவறானது
(ஈ) (A) மட்டுமே தவறானது ஆனால் (R) சரியானது

76. கர்மநாசா நதிநீர் சர்ச்சை எந்த மாநிலங்களுக்கு இடையில் உள்ளது.
(அ) பஞ்சாப் மற்றும் இராஜஸ்தான் (ஆ) ஆந்திர பிரதேசம் மற்றும் கர்நாடகா
**(இ) பீகார் மற்றும் உத்திரபிரதேசம்** (ஈ) அஸ்ஸாம் மற்றும் மணிப்பூர்

77. இந்தியாவில் நீண்ட மழைக்கால பருவத்தை கொண்டிருக்கும் மாநிலமானது
(அ) தமிழ்நாடு **(ஆ) கேரளம்** (இ) கர்நாடகம் (ஈ) குஜராத்

78. அச்சுநாயர் காலத்தில் விஜயநகர பேரரசு எத்தனை ராஜ்ஜியங்களாக பிரிக்கப்பட்டுள்ளது?
(அ) 15 ராஜ்ஜியங்கள் (ஆ) 16 ராஜ்ஜியங்கள் **(இ) 17 ராஜ்ஜியங்கள்** (ஈ) 18 ராஜ்ஜியங்கள்

79. பானிபட் போரில் பாபரின் இராணுவத்தில் இருந்து தலைசிறந்த துப்பாக்கி வீரர்
**(அ) உஸ்தாத் அலி** (ஆ) ஜாஃபர்கான் (இ) ஹீமாயூன் (ஈ) ஹிண்டால்

80. சிவந்த மண் கற்களால் கட்டப்பட்ட "லால் கிலா" எனப்படும் கோட்டைகை; கட்டியவர்
(அ) ஜஹாங்கீர் **(ஆ) ஷாஜஹான்** (இ) அக்பர் (ஈ) அவுரங்கசீப்

81. அகில இந்திய முஸ்லீம் லீக் கட்சியானது 1906ம் ஆண்டு எந்த இடத்தில் தொடங்கப்பட்டது?
(அ) அலிகார் **(ஆ) டாக்கா** (இ) லக்னோ (ஈ) லாகூர்

82. விஜய நகரம் எந்த பெயரில் அழைக்கப்பட்டது.
1. பீஜநகர்.
2. விருபாட்ஷபுரம்.
3. ஹோஸ்பட்டணம்.
4. வித்யாநகரம்
(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும் (இ) 2, 3 மட்டும் **(ஈ) 1, 2, 3, 4**

83. (A): அக்பர் சாரதா சட்டத்தின் முன்னோடியாக திகழ்ந்தார்
(B): இவர் ஆரணிக்கு குறைந்தது 18 வயதும் பெண்ணிற்கு 14 வயதுமாக தீர்மானித்து குழந்தை திருமணத்தை குறைக்க நடவடிக்கை எடுத்தார்.
(அ) (A) சரி ஆனால் (B) தவறு **(ஆ) (A) மற்றும் (B) சரி**
(இ) (A) தவறு மற்றும் (B) சரி (ஈ) (A) மற்றும் (B) தவறு

84. கீழ்வருபவற்றுள் அரசரின் தெய்வீக உரிமைக் கோட்பாட்டை முன்வைத்த முதல் அரசர் யார்?
(அ) அலாவுதீன் கில்ஜி **(ஆ) பால்பன்** (இ) இல்ட்டுமிஷ் (ஈ) இரஷியா

85. ஹரப்பன் மக்களால் பயிரிடப்படாத பயிர் எது?
(அ) பார்லி (ஆ) கோதுமை (இ) பஞ்சு **(ஈ) கரும்பு**

86. மக்களின் குறை தீர்ப்புக்காக உருவாக்கப்பட்ட பழமையான முறை
**(அ) ஓம்பட்ஸ்மன் அமைப்பு** (ஆ) லோக்பால்
(இ) லோக் ஆயுக்தா (ஈ) மேற்கண்ட எவையும் இல்லை

87. கீழ்காணப்படும் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் விதிகளில், உச்ச நீதிமன்றத்தை குறிப்பவை யாவை?
(அ) விதி 36 முதல் 51 வரை (ஆ) விதி 79 முதல் 123 வரை
**(இ) விதி 124 முதல் 147 வரை** (ஈ) விதி 12 முதல் 35 வரை

88. தடுப்புக்காவலர் சட்டத்தின்படி மூன்று மாத காலத்திற்கு பிறகு செயல்படுத்த அனுமதிப்பவர் யார்?
(அ) உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி (ஆ) இந்திய தலைமை வழக்குரைஞர்
(இ) தலைமை வழக்கறிஞர் **(ஈ) ஆலோசனைக்குழு**

89. சபாநாயகரால் பாராளுமன்ற அமர்வினை முடிவுக்கு கொண்டு வருதல் ----------- ஆகும்.
(அ) கலைப்பு (ஆ) ஒத்திவைப்பு **(இ) முடிவுக்கு கொண்டு வருதல்** (ஈ) அழைப்பு

90. கீழ்கண்டவற்றுள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான முறைமைசாரா சாதனம் (கருவி) எது?
(அ) அரைமணி நேர விவாதம் **(ஆ) பூஜ்ஜிய நேரம்**
(இ) குறுகிய கால விவாதம் (ஈ) கேள்வி நேரம்

91. கீழ்கண்டவற்றுள் தவறானது எது?
(அ) அடிப்படைக் கடமைகள் இந்திய அரசியலமைப்பின் நான்காம் பாகத்தில் உள்ளது.
(ஆ) 42வது சட்ட திருத்த்தின்படி அடிப்படைக் கடமை இந்திய அரசியலமைப்புடன் இணைக்கப்பட்டது.
**(இ) 2002ஆம் ஆண்டு, 82வது சட்ட திருத்தத்தின் படி மேலும் ஒரு அடிப்படைக் கடமை சேர்க்கப்பட்டுள்ளது.**
(ஈ) பொது பிரதிநிதித்துவச் சட்டம் 1951ல் அமல்படுத்தப்பட்டது.

92. அடிப்படை உரிமைகள் பற்றிய சரியான கூற்று

1. நீதிமன்றம் மூலமாக நடைமுறைப்படுத்தக் கூடியது.
2. இந்த உரிமைகள் முழுமையானது.
3. தேசிய அளவிலான அவசர நிலையின் போது விதி 20 மற்றும் 21ன் கீழ் உள்ளவைத் தவிர மற்ற அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படலாம்.
4. இவை இந்திய குடிமக்களுக்கு மட்டும் கிடைக்கப் பெறக் கூடியதாகும்.

(அ) 1, 2மற்றும் 3 **(ஆ) 1 மற்றும் 3** (இ) 1 மட்டும் (ஈ) 1, 3 மற்றும் 4

93. தீண்டாமை ஒழிப்பு பற்றி கூறும் அரசியலமைப்பு விதி எது?

(அ) விதி 20 (ஆ) விதி 19 (இ) விதி 18 **(ஈ) விதி 17**

94. இந்திய ரிசர்வ் வங்கியின் பணம் சாராத பணிகள் யாவை?

(அ) வங்கிகளின் கடனை கட்டுப்படுத்துதல்.
(ஆ) அந்திய செலாவணி மாற்றத்தை கட்டுப்படுத்துதல்
(இ) வணிக வங்கிகளுக்கு உரிமம் அளித்தல்
(ஈ) வைப்பு காப்பீட்டு திட்டம்

(அ) அ மற்றும் ஆ (ஆ) ஆ மற்றும் இ **(இ) இ மற்றும் ஈ** (ஈ) அ மற்றும் ஈ

95. பல பரிமாண வறுமைக் குறியீட்டை உருவாக்கியது

**(அ) Oxford மனித மேம்பாட்டு முயற்சி (HDI)** (ஆ) UNO மனித மேம்பாட்டு முயற்சி (DHI)
(இ) UNDP (ஈ) Morris D Morris

96. ஜமீன்தாரி முறையை தொடங்கியவர் யார்?

(அ) ஜான் ஷோர் **(ஆ) கார்வாலிஸ் பிரபு**
(இ) மின்டோ பிரபு (ஈ) வில்லியம் பென்டிக்

97. விவாட் சே விஸ்வாஸ் திட்டம் எதனுடன் தொடர்புடையது?

**(அ) நேரடி வரி** (ஆ) மறைமுக வரி (இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) (ஈ) இரண்டுமில்லை

98. இந்திய ரிசர்வ் வங்கி அரசுடைமையாக்கப்பட்ட நாள்

**(அ) ஜனவரி 1, 1949** (ஆ) ஜனவரி 1, 1950 (இ) ஏப்ரல் 1, 1949 (ஈ) ஏப்ரல் 1, 1950

99. NITI ஆயோக் பற்றிய பின்வரும் அறிக்கைகளில் சரியானதைத் தேர்ந்தெடு:

1. NITI ஆயோக்கின் நோக்கம் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவது மற்றும் நாட்டில் கூட்டுறவு கூட்டாட்சியை மேம்படுத்துவது.
2. இந்திய பிரதமர் NITI ஆயோக்கின் அதிகார பூர்வ தலைவராக உள்ளார்
3. NITI ஆயோக்கில் 8 முழுநேர உறுப்பினர்கள் உள்ளனர்.

(அ) 2 மற்றும் 3 மட்டும் (ஆ) 2 மட்டும் (இ) 1 மட்டும் **(ஈ) 1 மற்றும் 2 மட்டும்**

100. 12வது ஐந்தாண்டு திட்டத்தின் வளர்ச்சி இலக்கு -------------- இருக்கிறது

(அ) 7.8% விழுக்காடு (ஆ) 7% விழுக்காடு **(இ) 8% விழுக்காடு** (ஈ) 8.5% விழுக்காடு